ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

# வண்ணக்கன் புலவர்கள்

**க. கந்தசாமி பாண்டியன்**

தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு), இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி,
இராஜபாளையம், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

2381 சங்கப் பாடல்களைப் படைத்தோர் 473 பேர் என்பர். அரசன், பொன்வணிகன், அறுவை வணிகன், கூல வணிகன், பொற்கொல்லன் எனப் பல்வேறு தொழில் வல்லுநரும் சங்கப் புலவோராய்க் காணப்பெறுகின்றனர். அவருள் வண்ணக்கன் என்ற பெயர் தாங்கிய ஐவர் இப்பட்டியலில் உள்ளனர். இவர்களில் இருவர் வடதேசத்தினர். மூவர் தமிழ்நிலத்தினைச் சேர்ந்தோர். இவ்வண்ணக்கன் புலவர்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வண்ணக்கன்

வண்ணக்கர் என்போர் பொன் நாணயப் பரிசோதகர் என்று அகராதி முதல் அறிஞர் வரை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் வண்ணக்கன் என்பதற்குப் பல்வேறு பொருள்கள் உண்டு. நாணயசோதகன், நோட்டக்காரன், காரிய நிர்வாகி என்று அகராதிகள் கூறுகின்றன. ஆனால் கல்வெட்டுக்களில் வண்ணக்கன் என்பதற்கு சலவைத்தொழிலாளி, வண்ணச்சித்திரங்கள் எழுதுபவர் என்று பொருள் வருகின்றன. இதனை, "சனநாதத் தெரிந்த வலங்கை வேளைக் காறரில் வண்ணக்கன் ஐயாறனாகிய சித்திராளி" என்ற முதலாம் இராஜராஜனின் (கி.பி.1007) திருநெய்தானக் கல்வெட்டு பறைசாற்றி நிற்கின்றது (கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, சி.கோவிந்தராசன், 1987). வண்ணக்கன் என்ற சொல்லுக்கு மணிக்கல் வெட்டுபவர், மணி செதுக்குபவர், மணிக்கல் மெருகு கொடுப்பவர், கல்லின்மீது செதுக்கப்பட்ட எழுத்துக்களைப் பொறிப்பதற்குரியவர், கல்வெட்டுக்குரியவர் என்று தமிழ்ப் பேரகராதி (பக்கம், 573) குறிப்பிடுகின்றது. ஆனால் வண்ணக்கன் என்ற சொல் சங்கப் புலவர் பெயரினை அடுத்து முதன் முதலில் கி.பி. 4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரச்சலூர் கல்வெட்டில் ஆட்பெயருடன் இணைந்து வருகின்றது. இக்கல்வெட்டு "எழுத்துப் புனருத்தான் மணி வண்ணக்கன் தேவச் சாத்தன்" என்று குறிப்பிடுகின்றது. இதன்பின்னர் செங்கம் நடுகற் கல்வெட்டுக்களில் வருகின்றது (நாகசாமி (ப.ஆ.) செங்கட் நடுகற்கள், எண் 74). ஆனால் இக்கல்வெட்டுக்களில் வண்ணக்கன் என்பது சாதிப்பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில்தான் "வெள்ளாளன்" என்ற சாதிப்பெயரைத் தாங்கியுள்ளது.

## வடம வண்ணக்கன் தாமோதரனார்

இவரது இயற்பெயர் தாமோதரன் என்பதாகும். வடநாட்டிலிருந்து வருகைபுரிந்து செந்தமிழ்ப் புலமை பெற்றவர். இவர் பாடிய இரண்டு பாடல்கள் (குறுந்தொகை, 85, புறநானூறு, 172) காணக்கிடைக்கின்றன. இவர் புறநானூற்றில் குதிரைமலைக்கு உரியவனான பிட்டங்கொற்றனைப் புகழ்ந்து இயன்மொழி வாழ்த்தில் பாடியுள்ளார்.

***"ஏற்றுக வுலையே யாக்குக சோறே***
***கள்ளுங் குறைபட லோம்புக வெள்ளிழைப்***
***பாடுவல் விறலியர் கோதையும்...***
***..........***
***மாவள் ளீகைக் கோதையும்***
***மாறுகொண் மன்னரும் வாழியர் நெடிதே"***

(புறநானூறு., 172)

என்பதே அப்பாடலாகும். இதில் "மாறுகொண் மன்னரும் வாழியர்" என்றது அவர்தம் திறையாலேயே தன் போன்றோர் வளம் பெறுவதாலேயாம். அஃதே போல் குறுந்தொகைப் பாடலில்,

***"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்***
***சூல் முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்***
***தேம்பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்***
***நாறா வெண்பூக் கொழுதும்"***

(குறுந்தொகை, 85)

என்று ஊரில் வாழும் ஆண் குருவி தன் சூல் முதிர்ந்த பெடைக்குருவிக்குக் கரும்பின் பூப்பறித்து மெத்தை அமைக்கும் என்று குறித்துள்ளார். இதன் இலக்கிய நயத்தினை உணர்ந்த மாணிக்கவாசகர் பெருமான் தனது திருக்கோவையாரிலும் (பா.எண். 366), சேரமான் பெருமான் நாயனார் தனது திருவாரூர் மும்மணிக்கோவையிலும் (பாடல் எண். 19) இஃதே கருத்தினைக் கைக்கொண்டுள்ளது இவர்தம் இலக்கிய ஆற்றலைப் பறைசாற்றும்.

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-2, சூன் 2020

## வண்ணக்கன் சொருமங்குமரனார்

இவர் பாடிய பாடல் ஒன்று மட்டும் நற்றிணையில் (பாடல் எண், 257) உள்ளது. அது இரவில் வரும் தலைவன் சந்திக்கும் ஏதம் கூறி வரைவு கடாயச் சொல்லியதாய் அமைந்த குறிஞ்சித் திணைப் பாடலாகும். இதனை,

*“.............. நயந்தனை அருளாய்*
*இலங்குநர் மடிந்த அயம் திகழ் சிறுநெறிக்*
*கடுமா வழங்குதல் அறிந்தும்*
*நடுநாள் வருதி நோகோ யானே”*

(நற்றிணை, 257)

என்ற பாடலடிகள் சுட்டிநிற்கின்றன. வண்ணக்கன் சொருமங்குமரனார் பெயரை ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை தனது நற்றிணை உரையில் வண்ணக்கன் சேரிக் குமரங்குமரனார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இதில் வரும் “வண்ணக்கன் சேரி” என்பது இவரது ஊர்ப்பெயராகும் என்றும் குமரன் என்பார்க்கு மகனாதலால் குமரங்குமரனார் எனப்பட்டார் என்றும் குறிப்பிடுகிறார். தொண்டை நாட்டின் வடபகுதியில் வண்ணக்கன்பாடி, வண்ணக்கனூர் என்னும் ஊர்கள் இன்றும் உள்ளமை ஈண்டு சிந்தைக்குரியதாகும்.

## புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான்

இவரது பெயரில் கிழான் என்ற பின்னொட்டு வருவதால் வேளாண் மரபினைச் சார்ந்தவராகலாம். “கம்பூர் என்னும் ஊரினர். புதுக்கயம் என்னும் ஊரில் நாணயப் பரிசோதகராய் இருந்திருக்கலாம்” என்று பின்னத்தூராரும் (நற்றிணை உரை) புலவர் த.கோவிந்தனும் (தமிழ்ப்புலவர் வரிசை) குறிப்பிடுகின்றனர். ஆனால் ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை தனது நற்றிணை உரையில் இவரது பிறந்த ஊர் புதுக்கயம் என்றும் பாடல் சான்றோராய்த் திகழ்ந்ததே கம்பூர் என்று மாற்றிப் பகர்கின்றார் (ப.1138). எவ்வாறாயினும் இவரது இயற்பெயர் தெரிந்திலது. மணமனையுள் புகுந்த தோழி தன் தலைவியின் அழகினை உவந்து கூறுவதாய்க் குறிஞ்சித் திணைப் பாடலொன்றே (நற். 294) இவர் பாடியதாய்க் கிடைத்துள்ளது.

## விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்

விற்றூறு என்பது ஓரூர் ஆகும். இவர் பாண்டியனையும் அவனது மதுரையையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் பாடிய நற்றிணை 298 ஆவது பாடல் பாலைத்திணையைச் சார்ந்ததாகும். விற்றூற்று மூதெயினனார் என்னும் புலவரின் பாடல்கள் அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் காணக்கிடைக்கின்றன (அகநானூறு, 37, 136, 288, குறுந்தொகை, 372). பாடியோர் வரலாற்றிப் பகுதியில் “இப்பெயர் முத்தூற்று மூதெயினனார் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது. விற்றூறு அல்லது முத்தூறு என்பது ஓர் ஊரின் பெயர்” என்று பின்னத்தூரார் குறிப்பிட்டுள்ளார். விற்றூற்று எனும் ஊர் பற்றிய குறிப்பு எங்கும் காணவில்லை. ஆனால் முத்தூற்று என்னும் ஊர் குறித்து மாங்குடிக்கிழார் (புறநானூறு, 124) பாடியுள்ளார். இவ்வூர் வேளிரால் ஆட்சிசெய்யப்பெற்ற ஊராகும். இவ்வூரினைப் பாண்டியன் நெடுஞ்செழியன் கைப்பற்றினான் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மதுரையையும் புகழ்ந்து பாடியுள்ளது ஈண்டு சிந்தைக்குரியதாகும். உ.வே.சா புறநானூற்று உரையில் விற்றூற்று மூதெயினாரின் குறிப்பெழுதும் போது முத்தூற்றுக் கூற்றமே இவரது ஊராகக் கருத இடமுள்ளது என்று குறித்துள்ளார். “.... பொருள்வயிற் பிரிய எண்ணிய தலைவன் தலைவியைப் பிரிய மனமில்லை. அப்பொழுது,

*“.... நல்தார்ப்*
*பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கன்*
*ஒருமை செப்பிய அருமை வான்முகை”*

(நற்றிணை, 298)

என்று பாண்டியனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## வடம வண்ணக்கன் / வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தன் / வடம வண்ணக்கன் பேரிசாத்தன்

வடம வண்ணக்கன் என்னும் புலவர் பாடியபாடலாக குறுந்தொகையின் 81 வது பாடலை புலவர் கா.கோவிந்தன் தனது சங்கப் புலவர் வரிசையில் குறிப்பிடுகின்றார். இவரைப் போலவே இரா.இராகவையங்கார் தனது குறுந்தொகை விளக்கத்திலும் குறிப்பிடுகின்றார். ஆனால் உ.வே.சாவும், நியூசெஞ்சுரி புத்தகநிலைய உரையும் இப்பாடலையும் இப்புலவரையும் வடமவண்ணக்கன் பேரிசாத்தன் என்று குறிப்பிட்டுள்ளனர். ஈண்டு இப்புலவர் இருவராகக்கொள்ளாமல் வடம வண்ணக்கன் பேரிசாத்தன் என்றே குறிப்பிடப்பெறுகின்றது. மேலும் வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தன் என்னும் பெயரையும் அவ்வாறே அமைந்துள்ளது. இவர் பாடியனவாக இருபது

பாடல்கள் (நற்றிணை, 25, 37, 67, 104, 199, 299, 323, 378, குறுந்தொகை, 81, 159, 278, 314, 366, புறநானூறு., 125, 198, அகநானூறு, 5 பாடல்கள்) காணக்கிடைக்கின்றன. ஆனால் பெருஞ்சாத்தனார் என்னும் (குறுந்தொகை, 263) என்ற புலவர் ஒருவரும் உள்ளார். மேலும் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்ற வள்ளல் ஒருவரைப் பற்றிய செய்தியும் புறநானூற்றில் (பாடல் எண், 242) இடம்பெற்றுள்ளதும் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

"தென்கடல் முழங்குதிரை பாணியிற் பையப் பழம்பூண்ணுறுநரிற் பரவையினாலும்" (நற். 378) என்று கடலலையின் ஒலிக்கு முழவில் (பேரி) ஒலியை உவமை கூறிய சிறப்பால் இவர் பெயர்க்கு முன் "பேரி" எனும் அடைகொடுக்கப்பட்டது போலும் என்று உ.வே.சா. தனது உரையில் குறிப்பிடுகின்றார். பேரி என்பதும் ஆலம்பேரி என்பதும் வணிகர் குடிக்கான பெயர்கள். பேரிசெட்டிகள் என்போர் தொண்டை நாட்டில் வாழ்ந்துவருகின்றனர். எனவே இவர் வணிகர் குடியினைச் சார்ந்தவராகலாம் என்று ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை தனது நற்றிணை உரையில் குறிப்பிட்டுள்ளார். சாத்து என்பதும் வணிகரைக் குறிக்கும் சொல்லாகும். எனவே இவர் பொன்னின் தரம் பார்க்கும் தொழிலையும் வணிகமும் செய்தவர் என்பது புலனாகின்றது. பாண்டியன் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறன், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோர் காலத்தில் வாழ்ந்தவர்.

இவ்வாறு சங்கப்பாக்களின் உரைக் குறிப்புகளின் வழி வண்ணக்கன் என்போர் பொன்னின் தரத்தினை உரைப்போர் என்பதை அறியமுடிகின்றது. முதற்குலோத்துங்கனின் கல்வெட்டு "வண்ணக்கன்குடி யானதியாக துத்திர சதுர்வேதி மங்கலம்" என்றோர் ஊர்ப் பெயர் காணப்பெறுகின்றது. வேறொரு கல்வெட்டில் "உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப் பிரமதேயம் வண்ணக்குடியான தியாகசமுத்திர சதுர்வேதி மங்கலம்" என்னும் ஊர்ப்பெயர் வருகின்றது. தஞ்சை மாவட்டத்துத் திருநாவலூர் மயானக் கல்வெட்டு "சேற்றூர்க் கூற்றத்துப் பிரம்மதேயமான நாலூர் மகாசபையார் வண்ணக்கனார் அம்பலத்துக் கூடியிருந்து" என்ற குறிப்பினைத் தருகின்றது. வடஆற்காடு மற்றும் பிற மாவட்டங்களில் வண்ணக்கன்பாடி, வண்ணக்கன் குளம் முதலிய ஊர்ப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன (Annual Report No.272 of 1907, Ibid No. 273 of 1907, Ibid No 308 of 1910). அஃதேபோல் திருவையாற்று முதல் இராசாதிராசன் கல்வெட்டொன்றில் வண்ணக்கன் சாத்தன் நின்றானான வீரசோழ அனுக்கன்" (South Indian Inscription, Volume V. No.520) என்ற ஒருவன் பெயரும் அமைந்துள்ளது. ஆனால் கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி வண்ணம் என்பதற்கு அளவு, ஒப்பு, முறைமை, விகிதம், ஈடு, நிகர், வண்ணமாக ஒப்புடையதாக போன்ற பொருள்களைத் தருகின்றது. தொல்காப்பிய சொல்லதிகாரம் 16 வது நூற்பாவிற்கு உரைவரைந்த சேனாவரையர் "பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றாலும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றாலும் முதலாகிய குழுவின் வந்த குறிநிலை வழக்கும்" என்று செப்புகின்றார். சிலப்பதிகாரம் ஊர்காண் காதை (அடிகள், 201 - 204)

***"சாத ரூபங் களிச்சிறை யாடகம்***
***சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற்***
***பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழித்தாங்"***

என்று பொன்னின் தரத்தினைப் பொருத்து அதன் பெயர்களைப் பட்டியலிடுகின்றது. பொன்னின் தரத்தினை உரைத்துப் பார்க்கும் உரைகல்லையும் (பெரும்பாணாற்றுப்படை, 220, குறுந்தொகை, 192, அகநானூறு, 178) சங்கப்பாக்கள் பதியம் செய்கின்றன. நீலகேசி உரையிலும் வண்ணக்கர் என்போர் நாணயப் பரிசோதகர் என்றே வருகின்றது.

ஆனால் பிற்காலத்தில் வண்ணக்கன் என்பதற்கு நிர்வாகி என்ற பொருளும் கையாளப்பட்டுள்ளது. இலங்கை மட்டக்களப்பில் அமைந்துள்ள கோவில் நிர்வாகியின் பெயர் "வண்ணக்கர்" என்பதாகும் (www.muthukamalm.com, கட்டுரை ஆசிரியர், கவிக்கோ வெல்லவூர்க் கோபால்) மேலும் வண்ணக்கன் என்பது கொங்கு வேளாளர் மரபில் அமைந்துள்ள ஒரு பிரிவாகும். இவர்களை "வண்ணக்கர் குல வள்ளல்" என்றே அழைக்கின்றனர். கொங்கு மண்டலச் சதகமும் இதனைப் பறைசாற்றி நிற்கின்றது. அரச்சலூர்க் கல்வெட்டும் அம்மன்னனை வள்ளல் என்றே குறிப்பிடுவதும் ஈண்டு சுட்டத்தக்கதாகும்.

அதைப்போலவே "வடம" என்பதற்கு வடக்கிலிருந்து வந்தவர்கள் என்பது பொருளாகும். இதனை "வடவர்களின் வழி வந்தவன் என்னும் பொருளுடைய "வடவர் மகன்" என்பதன் மரூஉ "வடமன்" என்பதாகும். இன்றும் பிராமணர்களின் ஒரு கிளைக்குடியினர் "வடமர்" என வழங்கப்பெறுகின்றது" என்ற துரை அரங்கசாமியின் கூற்று (சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக்கங்கள், 371 - 372) அரண்செய்கின்றது.

எனவே சங்கப் பனுவல்களில் அங்கம் வகித்த வண்ணக்கன் புலவர்கள் வடதேசத்திலிருந்து வந்தவர்கள் என்பதை உணர முடிகின்றது. மேலும் வண்ணக்கன் என்பது பொன்னைப் பரிசோதிப்பவர் என்பதையும் அறியடிமுடிகின்றது. சங்க காலத்தில் வழங்கிய சொற்கள் அப்பொழுது ஒரு பொருளும் காலமாற்றத்தின் பொருட்டு தற்போது வேறொரு பொருளும் வழங்கி வருதைப் போன்று வண்ணக்கன் என்பது சங்க காலத்தில் நாணயப் பரிசோதகர் (சங்க காலத்தில் பொன் மணிகள் நாணயங்களாகப் பயன்படுத்தப்பெற்றன. தங்கமும் இரும்பும் பொன் (புறநானூறு, 14) என்றே வழங்கப்பெற்றது) என்றும் பிற்காலத்தில் வள்ளல்களையும் சிறந்த நிர்வாகிகளையும் ஒரு குலத்தினையும் குறித்தது எனலாம். மொத்தத்தில் வண்ணக்கன் என்பது பல பொருள் குறித்த ஒரு சொல் என்பதே திண்ணம்.

## VANNAKAN POETS

**K. Kanthasamy Pandian**

There are 473 composers of 2381 Sangam songs. The king, the gold merchant, the surgeon, the merchant, and the goldsmith are all found in the sangam association. There are five people of poets in the list with the name Vannakan. Two of them were from the North. The other three belonged to the south.

We can realize that the Vannakan poets who had been part of the Sangam activities were from the North. It is also known that Vannakkan means a gold appraiser. It is obvious that the words used in sangam period bore specific meanings which in the long run gained different additional meaning. Similarly 'Vannakkan' was used to refer to an appraiser of gold coins and gems. Iron was also used to mint coins and referred to as coins. Later the same word was applied to describe the Philanthropists, administrators and a particular community. So it is certain that the word 'Vannakkan' has become a word with multiple meanings.